**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Parimala | Prosecution | P.W-1, L.W-1 |
| Husband Name | Arivazhagan | Defence | |
| Village | Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 28/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **13.08.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். கடந்த 2.6.2021 ம் தேதி காலை 8.00 மணி அளவில் என் நாத்தனார் தேன்மொழி கொல்லைப் புறத்தை கூட்டி கொளுத்தி கொண்டிருந்தார். கொளுத்தி கொண்டிருந்த இடம் எதிரி அபிதாவிற்கு சொந்தமானது என்று கூறி என் நாத்தனார் தேன்மொழியை முடியை பிடித்து இழுத்து அடித்தார். நான் 7 மாத கர்ப்பினியாக இருந்து தடுக்க சென்றபோது சிலம்பரசன் இரும்பு கம்பியால் என் வயிற்றில் அடித்ததால் வயிற்றில் இருந்த குழந்தை அசைவின்றி இருந்தது. அபிதாவும் இலக்கியாவும் என் அத்தை வாசுகியை இரும்பு முறத்தால் அடித்து தலையில் காயம் ஏற்பட்டு அவரும் சிகிச்சை எடுத்து கொண்டார். மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு காயம் பட்ட எனனையும் என் நாத்தனார் மற்றும் மாமியாரையும் தனியார் வாகனத்தில் சிகிச்சைக்காக என் மாமா பாஸ்டின் அழைத்து சென்றார். அங்கு நானும் என் மாமியாரும் ஒரு வாரம் உள்நோயாளியாகவும், என் நாத்தனார் 2 நாட்களும் தங்கி சிகிச்சை எடுத்து கொண்டோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **அந்த கையெழுத்து அ.சா.ஆ .1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது காலை 8.00 மணி. நான் வடக்கு தெரு, ஆத்துக்குடியில் வசிக்கிறேன். சம்பவம் நடந்தது என் மாமியார் வீடு என்றால் சரிதான். என் வீட்டிற்கும் என் மாமியார் வீட்டிற்கும் ஒரே பொதுச்சுவர் தான் உள்ளது. எதிரிகள் வீடு எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. எதிரிகளுக்கும் என் மாமனார் குடும்பத்தாருக்கும் இடையே சொத்து தகராறு உண்டு என்றால் சரிதான். எதிரி பன்னீர் குடும்பத்துடன் 50 ஆண்டுகளுக்கு மேலாக அவர் குடியிருக்கும் வீட்டை கிரயம் வாங்கி குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்மந்தமாக என் மாமியார் எதிரி பன்னீர் மீது சொத்து வழக்கு தாக்கல் செய்து வழக்கு விசாரணையில் உள்ளது என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்மந்தமாக பலமுறை ஊர் பஞ்சாயத்து வைத்தார்கள் என்றால் சரிதான். நான் பிறந்த ஊர் சீர்காழி கூத்தாநல்லூர் என்றால் சரிதான். கூத்தாநல்லூருக்கும் ஆத்துக்குடிக்கும் இடையே 20 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நான் ஆத்துக்குடியில் இல்லை என்றாலும் கூத்தாநல்லூரில் என் தாயார் வீட்டில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. ப.சா.2 தேன் மொழி என் நாத்தனார் , ப.சா. 3 வாசுகி என் மாமியார் என்றால் சரிதான். ப.சா.4, 5 என் உறவினர்கள் என்றால் சரிதான். ப.சா.6 சபிதா என் ஓர்ப்படியார். சாட்சிகள் தன்ராஜ், தமிழ்வாணன் என் உறவினர்கள் தான். எனக்கு மாமா வேண்டும். சாட்சி தேன்மொழி , சபிதா, பாஸ்கரன், பாஸ்டின், அறிவழகன், பாரதிராஜா, வில்வேந்திரன் ஆகியோர்கள் மீது எதிரிகள் புகார் கொடுத்து குற்ற எண் 391/2021 வழக்கு இந்நீதிமன்றத்தில் CC 261/2021 u/s 147, 148, 294(b), 354, 427, 506(ii), 352 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மருத்துவ சிகிச்சைக்கு சென்றபோது நான் மருத்துவரிடம் 7 மாத கர்ப்பினியாக இருந்தேன் என்று கூறினேனா என்றால் கூறினேன். நான் மேற்படி விவரத்தை மருத்துவரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு குழந்தை பிறந்து குழந்தை நல்ல முறையில் தான் உள்ளது என்றால் சரிதான். புகாரை என் மாமா வில்வேந்திரன் எழுதிக்கொடுத்தார். புகாரில் நான் கையெழுத்து மட்டும் தான் செய்தேன் என்றால் சரிதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை எடுத்து கொண்டேன். எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் எனக்கு உள்காயமோ வெளிக்காயமோ இல்லை என்று கூறிஉள்ளார் என்றால் சரியல்ல. என் அத்தை ஒரு வார காலம் மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டார். போலிசார் என்னிடம் 2.6.2021 ல் கொரோனா காலத்தில் புகார் வாங்கினார்கள். சம்பவம் நடந்தபோது தாமஸ், ஆசைத்தம்பி, சபிதா ஆகியோர் இல்லை என்றால் சம்பவத்தின் பின்னிட்டு வந்தார்கள். சம்பவத்திற்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என் நாத்தனார் தேன்மொழி மீது இந்த

வழக்கு சம்பவத்திற்கு 2 மாதங்களுக்கு முன்பு எதிரிகள் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றாலும் என் மாமியாருக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம்இருப்பதால் எதிரிகளை பழிவாங்க வேண்டி எவ்வித காயமும் இன்றி மருத்துவ  சிகிச்சை எடுதததுகொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Thenmozhi | Prosecution | P.W-2, L.W-2 |
| Husband Name | Vimalraj | Defence | |
| Village | Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 30/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>13.08.2024.</u>**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஆடிட்டர் அலுவலகத்தில் வேலை செய்து வந்தேன். தற்போது வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 2.6.2021 ம் தேதி காலை 8.15 மணி அளவில் நானும் அ.சா. 1 பரிமளாவும் எங்கள் வீட்டு கொல்லைப்புறத்தை கூட்டி எங்கள் இடத்தில் குப்பைகளை கொளுத்தி கொண்டிருந்தபோது எதிரி அபிதா ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து வந்து என் முகத்தில் ஊற்றியதால் எங்கள் இருவருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டு என்னை குச்சிகாரி தேவடியா மகளே என்று அசிங்கமாக திட்டினார். அதன் பின்னிட்டு எங்கள் இருவருக்கும் இடையே அமைதியாக சென்றுவிட்ட பின்பு வெளியே சென்றிருந்த எதிரி சிலம்பரசன் காலை 9.00 மணியளவில் கொல்லைப்புறத்திற்கு வந்து இரும்பு கம்பியால் பரிமளாவை வயிற்றில் அடித்துவிட்டார். அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டு துடித்து கொண்டிருந்தார். தென்னரசன் கட்டையால் என்னை அடித்தார். அபிதா, இலக்கியா இருவரும் என் தலை முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். எனது அம்மாவை சசிகலா தென்னரசு பன்னீர் ஆகிய மூவரும் கையால் அடித்தார்கள். சசிகலா இரும்பு முறத்தால் என் அம்மா தலையில் அடித்தார். வில்வேந்தன், பாஸ்டின் ஆகியோர் வீட்டிற்கு வந்ததும் சம்பவத்தை தடுத்தார்கள். நான், என் அம்மா, மற்றும் பரிமளா மூவரும் தனியார் வாகனத்தில் எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் ஸ்டாலின் என்பவர் எங்களை மருத்துவமனைக்கு மயிலாடுதுறைக்கு அழைத்து சென்றார். அங்கு நாங்கள் மூவரும் ஒரு வார காலம் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை எடுத்து கொண்டோம். என் அம்மாவிற்கும் எனக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. பரிமளாவிற்கு வயிற்றில் காயம்

ஏற்பட்டது. போலிசார் என்னை  விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜராகியும் எதிரிகள்  தரப்பில்  வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.251/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Vasuki | Prosecution | P.W-3, L.W-3 |
| Husband Name | Balaiyan | Defence | |
| Village | Aathukudi | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 58/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **13.08.2024.**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது மகள் கடந்த 2.6.2021 ம் தேதி காலை 8.15 மணி அளவில் எங்கள் வீட்டு கொல்லைப்புறத்தை கூட்டி கொண்டிருந்தபோது எதிரி அபிதா ஒரு வாளியில் தண்ணீர் எடுத்து வந்து தேன்மொழி முகத்தில் தண்ணீரை ஊற்றி முடியை இழுத்து கீழே தள்ளி அடித்தார். நான் தடுக்க சென்றபோது அபிதாவின் தாயார் சசிகலா இரும்பு முறத்தால் என் தலையில் கொட்டினார். பின்னர் நாங்கள் அமைதியாக சென்ற பின்னர் காலை 9.00 மணியளவில் எதிரி சிலம்பரசன் வந்த பின்பு எங்கள் மூவரையும் கொல்லைப்புறத்தில் நின்று கொண்டு குச்சிகாரி தேவடியா என்று திட்டினார். எதிரி சிலம்பரசன் இரும்பு ராடால் கர்ப்பினியான என் மருமகள் வயிற்றில் அடித்ததில் குழந்தை அசைவற்ற நிலைக்கு சென்றுவிட்டது. எங்கள் மூவரையும் தனியார் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பாஸ்டின் என்பவர் அழைத்து சென்றார். நாங்கள் மூவரும் ஒரு வார காலம் தங்கி சிகிச்சை எடுத்து கொண்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி சிலம்பரசன் என்னை திட்டி தாக்கியதாக சொல்லப்படும் இடம் என் வீட்டின் காம்பவுன்ட் உள்ளே என்றால் சரிதான். எதிரி என்னை முறத்தால் அடித்த விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் நான் மயக்க நிலையில் இருந்ததால் சொன்னேனா என்று நினைவில்லை. எதிரி அடித்ததில் எனக்கு தலையில் குத்திய காயம்

மட்டும் இருந்தது. என் தலையில் அடிப்பட்டது சம்மந்தமாக அ.சா.1 புகாரில் கூறி உள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. மருத்துவமனைக்கு 12.00 மணிக்கு சென்றோம். ஒரு வாரம் தங்கி சிகிச்சை எடுத்து கொண்டேன். போலிசார் விசாரணையில் நான் ஒரு வார காலம் சிகிச்சை பெறவில்லை என்று கூறி உள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மருமகளுக்கும் எதிரி அபிதாவுக்கும் எங்கள் வீட்டின் பின்புறம் தான் பிரச்சனை நடந்தது என்றால் சரிதான். அப்போது நான் வீட்டின் உள்ளே தான் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நேரம் காலை 8.15 மணி. சம்பவத்தின் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். இது சம்மந்தமாக எதிரிகள் எங்கள் குடும்பத்தினர் மீது கொடுத்த புகார் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்தினர் சுமார் 50 வருட காலமாக எங்கள் வீட்டின் அருகே வசித்து வருகின்றனர் என்றால் சரிதான். எதிரிகள் வீடு கட்டிய பின்னிட்டு தான் நாங்கள் வீடு கட்டினோம் என்றால் சரிதான். பிரச்சனைக்குறிய இடத்தை எதிரிகள் பெர்னான்டா என்பவரிடம் கிரயம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் பெயரில் கிரய பத்திரம் உள்ளது . பதிவு செய்த கிரய பத்திரம் உண்டா என்றால் உண்டு, வருடம் நினைவில்லை. இடத்தின் நீள அகலம் பத்திரத்தில் உள்ளது. பிரச்சனைக்குறிய இடம் எதிரிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் யாருடைய அனுபவத்திலும் இல்லை. இது சம்மந்தமாக ஊர் முக்கியஸ்தர்கள் சமாதானம் பேசியும் நாங்கள் சமாதானம் ஆகவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்றாலும் அ.சா.1 என் மருமகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**